புதுச்சேரி அரசு
தொழிலாளர் துறை
பயிற்சிப் பிரிவு இயக்குனரகம்

## அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர் சேர்க்கை 2025

# விளக்க கையேடு






தொழிலாளர் துறை வளாகம்
வழுதாவூர் சாலை, காந்தி நகர், புதுச்சேரி – 605 009.

பொருளடக்கம்


| வ எண் | விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பயிற்சியின் நோக்கம் (Training Objectives) | 2 |
| 2 | பொதுவான தகவல்கள் (General Information) | 2 |
| 3 | பயிற்சி பற்றிய தகவல் (Details of Training) | 2 |
| 4 | கல்வித் தகுதி (Educational Qualification) | 3 |
| 5 | வயது வரம்பு (Age Limit) | 3 |
| 6 | உடல் தகுதி (Physical Fitness) | 3 |
| 7 | இட ஒதுக்கீடு (Reservation) | 4 |
| 8 | கிடைநிலை ஒதுக்கீடு (Horizontal Reservation) | 4 |
| 9 | குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate) | 5 |
| 10 | விண்ணப்பிக்கும் முறை (How to apply) | 5 |
| 11 | பயிற்சி பெறுபவரைத் தேர்ந்தெடுக்கும் முறை (Selection Procedure) | 6 |
| 12 | தரவரிசையில் சம மதிப்பெண் (Equal score in ranking) | 7 |
| 13 | அசல் சான்றிதழ் சமர்ப்பிப்பு (Submission of original certificates) | 7 |
| 14 | சான்றிதழ் சரிபார்ப்பு (Verification of Certificates) | 8 |
| 15 | பயிற்சிக் கட்டணம் (Tuition fee) | 8 |
| 16 | உதவித் தொகை (Stipend) | 9 |
| 17 | ஊக்கத் தொகை (Merit scholarship) | 9 |
| 18 | வேலைவாய்ப்புக் குழு மற்றும் வேலை வாய்ப்புகள் (Placement cell and Job Opportunities) | 9 |
| 19 | பயிற்சியாளர் நடத்தை மற்றும் ஒழுக்க விதிமுறைகள் (Trainees code of conduct and discipline) | 9 |
| 20 | NCVT பயிற்சிப் பிரிவுகள், பயிற்சிக் காலம் & கல்வித் தகுதி | 10 |
| 21 | SCVT பயிற்சிப் பிரிவுகள், பயிற்சிக் காலம் & கல்வித் தகுதி | 11 |
| 22 | அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பயிற்சிப் பிரிவுகள் | 11 |
| 23 | அலுவலக முகவரி & அலைபேசி விவரம் (Contact details) | 16 |

# விளக்க கையேடு 2025

## 1. பயிற்சியின் நோக்கம் (Training Objectives)

புதுச்சேரியில் உள்ள இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தொழிற்பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## 2. பொதுவான தகவல்கள் (General Information)

புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு முறையில் மேற்கொள்ளப்பட உள்ளதையடுத்து, விண்ணப்பங்கள் ஆன்லைன் (online) மூலம் வரவேற்கப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் விண்ணப்பதாரர்கள், இந்த விளக்க கையேட்டில் தரப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் கவனத்துடன் படித்தறிந்து விண்ணப்பிக்கவும்.



- தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றிட விருப்பம் உள்ளோர் விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக மட்டும் சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் (merit list) தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப ஒதுக்கப்பட்ட தேதிகளில் அரசு விதிகளுக்கு உட்பட்டு கலந்தாய்வு (counselling) வாயிலாக சேர்க்கை நடைபெறும்.

## 3. பயிற்சி பற்றிய தகவல் (Details of Training)

- தொழிற்பயிற்சி நிலையங்களில் மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமம் மற்றும் மாநில தொழிற்பயிற்சிக் குழுமம் அங்கீகாரத்தின்கீழ், பல்வேறு தொழிற்பிரிவுகளில் ஆறுமாதம், ஓராண்டு மற்றும் இரண்டாண்டு கால அளவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் விவரம் மற்றும் அங்கு பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளின் விவரம் ஆகியன பகுதி 22-ல் விளக்கப்பட்டுள்ளன.
- பயிற்சிக்கால அளவு, சேர்க்கைக்கான கல்வித் தகுதி ஆகிய விவரங்கள் பகுதி 20 மற்றும் 21-ல் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- மத்திய அரசு பயிற்சி இயக்குநரகம் (DGT) அறிவுறுத்தலின்படி புதுவையில் உள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 2025-ஆம் ஆண்டுக்கான பயிற்சி 01.09.2025 முதல் துவங்கும்.
- பயிற்சியின்போது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அல்லது பயிற்சிக்கால இறுதியிலும் அகில இந்தியத் தொழிற்பயிற்சித் தேர்வு நடத்தப்பட்டு, அந்தந்த தேர்வுகள் அனைத்திலும் வெற்றி பெறுபவர்களுக்கு தேசிய தொழில் சான்றிதழ் (NTC) வழங்கப்படும்.

- சில அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாநில தொழிற்பயிற்சிக் குழுமத்தின் கீழ் செயல்படும் தொழில் பிரிவுகளில் வழங்கப்படும் பயிற்சிக்கு மாநில அரசு தொழிற்பயிற்சிக் குழுமத்தின் சான்றிதழ் (SCVT Certificate) வழங்கப்படும்.
- மாநில அரசு தொழிற்பயிற்சிக் குழுமத்தின் மூலம் நடைபெறும் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு NCVT மூலம் தேர்வு எழுத SCVT-ன் மதிப்பெண் அடிப்படையிலும், காலியாக உள்ள இடங்களின் அடிப்படையிலும் முன்னுரிமை வழங்கப்படும்.

## 4. கல்வித் தகுதி (Educational Qualification)

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியாக எட்டாம் வகுப்புத் தேர்ச்சி மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- **எட்டாம் வகுப்புத் தேர்ச்சி** – தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்வரும் தொழில் பிரிவுகளுக்கு மட்டும் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்குமேல் கல்வித்தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
    - கட்டடம் கட்டுபவர் - Mason (Building Constructor) NSQF Level 3
    - தையல் தொழில்நுட்பம் – Sewing Technology – NSQF 3
    - வெல்டர் – Welder – NSQF Level 3
    - ஒயர்மேன் – Wireman - NSQF 4
- **பத்தாம் வகுப்பு தேர்ச்சி** – மற்ற அனைத்துப் பயிற்சிப் பிரிவுகளுக்கும் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி அல்லது அதற்குமேல் கல்வித்தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்தாம் வகுப்பு தனித்தேர்வாக எழுதி தேர்ச்சி பெற்று இருப்பினும், சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர்.



## 5. வயது வரம்பு (Age Limit)

- 2025-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாள் 14 வயது நிரம்பியவர்கள் விண்ணப்பிக்கலாம். அதிகபட்ச வயதுவரம்பு இல்லை.

## 6. உடல் தகுதி (Physical Fitness)

- விண்ணப்பதாரர் தொற்றுநோய்/ அதற்கான அறிகுறிகள் இல்லாதவராக இருத்தல் வேண்டும். மிகுதி படக்கூடிய அல்லது பயிற்சி பெறுவதற்குத் தகுதியற்ற வியாதிகளினாலும் பொது சுகாதரத்திற்கு தகுதியற்ற வியாதிகளினாலும் பீடிக்கப்பட்டுள்ளவராக இருக்கக் கூடாது. மருத்துவ சான்றிதழ்களின்படி உடல் தகுதியற்றோர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மாற்றுத் திறனாளிகள் உடல் குறைபாட்டின் தன்மையைப் பொறுத்து மருத்துவரின் பரிந்துரையின் பேரில் உரிய தொழிற்பிரிவுகளில் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர்.

- மருத்துவரின் நேர்முகப் பரிசோதனைக்கு உட்பட்டு மருத்துவர் அளிக்கும் சான்றிதழின்படி மட்டுமே இவர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்பிரிவுகள் ஒதுக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகள் தங்களின் உடல் குறைபாட்டின் தன்மையை விளக்கும் வகையில் 125x75 மி.மீ. நிழற்படத்தையும் முடவியல் (Ortho) மருத்துவரின் சான்றிதழையும் சேர்க்கையின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

## 7. செங்குத்து இட ஒதுக்கீடு (Vertical Reservation)

| வ. எண். | இட ஒதுக்கீட்டுப் பிரிவு | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | பொதுப் பிரிவு (General) | 50% |
| 2 | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) | 11% |
| 3 | பிற்படுத்தப்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லிம் (BCM) | 2% |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) | 18% |
| 5 | உச்ச பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (EBC) | 2% |
| 6 | பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் (BT) | 0.5% |
| 7 | பூர்வீக அட்டவணை இனத்தவர் (SC Origin) | 16% |
| 8 | அட்டவணைப் பழங்குடியினர் (ST) | 0.5% |

மேற்படி ஒதுக்கீடுகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெற்று சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்கவேண்டும்.

- சாதி சான்றிதழ் (Community Certificate) – துணை வட்டாட்சியருக்கு குறையாத தகுதி உடைய அதிகாரியிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.



## 8. கிடைநிலை ஒதுக்கீடு (Horizontal Reservation)

| வ. எண். | கிடைநிலை ஒதுக்கீட்டுப் பிரிவு (Horizontal Reservation) | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | புதுச்சேரி யூனியன் பிரதேச விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள் / பேரக்குழந்தைகள் (Freedom Fighter) | 4% |
| 2 | முன்னாள் ராணுவத்தினரின் குழந்தைகள் (Wards of Ex-Service Persons) | 3% |
| 3 | மாற்றுத் திறனாளிகள் (PwD) (புதுச்சேரி அரசு ஒப்புதலுக்கு உட்பட்டது) | 5% |
| 4 | விளையாட்டு வீரர்கள் (Meritorious Sports Person) | 1% |

மேற்படி ஒதுக்கீடுகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களிடமிருந்து 01.01.2025-க்குப் பிறகு பெற்ற சான்றிதழ்களை சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

- **விடுதலைப் போராட்ட வீரர் இட ஒதுக்கீடு:** நல அலுவலர், விடுதலைப் போராட்ட வீரர்கள் அலுவலகம், தலைமைச் செயலகம், புதுச்சேரி.
- **முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள் இட ஒதுக்கீடு:** செயலர், ராஜ்ய சைனிக் போர்டு, புதுச்சேரி.
- **விளையாட்டு வீரர்கள் இட ஒதுக்கீடு:** தேசிய/ மாநில/ பிராந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றதற்கான புதுச்சேரி மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களிடம் இருந்து சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும்.

## 9. குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate)

குடியிருப்புச் சான்றிதழ் அரசின் கீழ்க்கண்ட உத்தரவுப்படி இருத்தல் வேண்டும்.



- விண்ணப்பிக்கும் மாணவர் புதுச்சேரி அரசின் அங்கீகாரம் பெற்ற ஒரே பள்ளியிலோ அல்லது வெவ்வேறு பள்ளிகளிலோ இறுதி ஐந்தாண்டுகள் படித்தவராக இருந்தால், குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate) மாற்றாக 2025-ஆம் ஆண்டு பள்ளியில் வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழை (Transfer Certificate) சமர்ப்பித்தால் போதுமானது.
- மேற்கண்டவாறு புதுச்சேரி அரசின் அங்கீகாரம் பெற்ற பள்ளியில் அல்லது பள்ளிகளில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பயிலாத மாணவர்கள் தமது பெற்றோர் ஐந்து ஆண்டுகள் புதுவை யூனியன் பிரதேசத்தில் குடியிருந்ததற்கான குடியிருப்புச் சான்றிதழை, 01.01.2025-க்குப் பிறகு பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

## 10. விண்ணப்பிக்கும் முறை (How to apply)

- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க https://www.centacpuducherry.in/itiadmission/ அல்லது https://labour.py.gov.in என்ற இணையதள முகவரி மூலம் ஆனலைனில் (online) விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையதளத்தில் விண்ணப்பத்தில் உள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தபின் பாஸ்போர்ட் அளவு (passport size) புகைப்படம், கல்விச் சான்றிதழ் (8-ஆம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு) மற்றும் சேர்க்கைக்குத் தேவையான இதர சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- பிறகு விண்ணப்பதாரர் தான் படிக்க விரும்பும் தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் மற்றும் பகுதியை அவர்தம் விருப்பத்திற்கு ஏற்பத் தேர்வு செய்ய வேண்டும்.

- மாணவர் விண்ணப்பிக்கும்போது தங்களது சரியான அலைபேசி எண் (Mobile number) மற்றும் மின்னஞ்சல் முகவரியினைக் (email) குறிப்பிட வேண்டும். கலந்தாய்வு நடைபெற இருக்கும் தகவல்கள் அனைத்தும் குறுந்தகவல்கள் (SMS) மற்றும் மின்னஞ்சல் (email) வாயிலாக மட்டுமே அனுப்பப்படும் என்பதால், இதில் தனி கவனம் செலுத்தக் கேட்டுக்கொள்ளப் படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் அலைபேசி எண் (Mobile number) மற்றும் மின்னஞ்சல் (email) முகவரியினை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தனித்தனி கலந்தாய்வு நடத்தி சேர்க்கை நடைபெறும்.
- இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதில் ஏதேனும் ஐயங்கள் இருப்பின் அருகில் உள்ள அரசு அல்லது தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தை அணுகி உதவி மையத்தின் மூலம் இலவசமாக விண்ணப்பிக்கலாம்.

### 11. பயிற்சி பெறுபவரைத் தேர்ந்தெடுக்கும் முறை (Selection Procedure)

- எட்டாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப்பிரிவு இடங்களுக்கு பொதுவான தகுதித் தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு நடத்தப்படும் தகுதித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு பற்றிய் விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.
- பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப் பிரிவுகளில் விண்ணப்பிப்பவர்களை ஒருங்கிணைந்த சேர்க்கை குழுவின் மூலம் புதுவை அரசு கல்வித்துறை பின்பற்றும் வழிமுறைகளிபடி தரவரிசை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும்.
- ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் தரவரிசைப்பட்டியலின் படி விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வு முறையில் அழைக்கப்பட்டு விருப்பமான பாடப்பிரிவு தேர்வு செய்யும் முறை கடைப்பிடிக்கப்படும்.



- அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கலந்தாய்வு நிகழ்வில் குறிப்பிடப்படும் தேதி மற்றும் நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.
- விண்ணப்பதாரர் அவருக்கென ஒதுக்கப்பட்ட கலந்தாய்வுத் தேதி மற்றும் நேரத்தில் கலந்துகொள்ளத் தவறினால் கலந்தாய்வு நடைபெறும் மற்ற தேதிகளில் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். இத்தகைய விண்ணப்பதாரர்கள் தங்களது ஆரம்பநிலை தரவரிசைப்படி இடம் தேர்வு செய்ய உரிமை கோர இயலாது.
- விண்ணப்பதாரர்கள் தரவரிசை மற்றும் அவர்கள் கலந்தாய்வில் தேர்வு செய்த முன்னுரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் உள்ள தொழிற்பிரிவு உறுதி செய்யப்பட்டு தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Admission Order) வழங்கப்படும்.



- விண்ணப்பதாரர்கள் தாங்கள் சேர்க்கை பெற்ற தொழிற்பயிற்சி நிலையத்தில் குறிப்பிட்ட நாளில் மாலை 5.00 மணிக்கு முன்பாக பயிற்சியில் சேர வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேரத்தவறினால் அந்த இடம் காலியிடமாகக் கருதப்பட்டு வேறு தகுதியான நபருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

### 12. தரவரிசையில் சம மதிப்பெண் (Equal score in ranking)

விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசை தயார் செய்யப்பட்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தரவரிசையில் சமநிலை மதிப்பெண் பெற்றிருந்தால் கீழ்க்காணுமாறு தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

(i) கணித மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவர்.
(ii) கணிதப் பாடத்தில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால், அறிவியல் பாடத்தில் மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார்.
(iii) கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால், பிறந்த தேதியைக் கொண்டு அதிக வயதுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 13. அசல் சான்றிதழ் சமர்ப்பிப்பு (Submission of original certificates)

விண்ணப்பதாரர்கள் பயிற்சி நிலையத்தில் சேர தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Admission Order) வழங்கப்படும் பட்சத்தில் தங்களுக்கு பொருந்தக்கூடிய கீழ்க்கண்ட அசல் சான்றிதழ்களை அவர்கள் சேர இருக்கும் தொழிற்பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப் பிரிவு இடங்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழ் அல்லது எட்டாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப் பிரிவு இடங்களுக்கு எட்டாம் வகுப்பு தேறியதற்கான பள்ளிச் சான்றிதழ்.

(ii) இறுதியாகக் கல்வி பயின்ற கல்வி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மாற்றல் சான்றிதழ் (Transfer Certificate).

(iii) குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate)

(iv) சாதிச் சான்றிதழ் (Community Certificate) (ஒதுக்கீடு வேண்டுபவர் மட்டும்)

(v) மாற்றுத் திறனாளிகளிகளுக்கு 40% அல்லது அதற்கு மேலான உடல் ஊனத்திற்கான சான்றிதழ்.

(vi) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்/ பேரக்குழந்தைகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் அலுவலகத்திலிருந்து பெற்ற நிரூபண சான்றிதழ் அல்லது விண்ணப்பதாரர்கள்

விடுதலை வீரர்களின் பேரக்குழந்தைகளாக இருப்பின் அதை நிரூபிக்கத் தேவைப்படும் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள்.

(vii) முன்னாள் ராணுவத்தினரின் குழந்தைகளாக இருப்பின் அதற்கான சான்றிதழ்.

(viii) விளையாட்டு வீரர் பன்னாட்டு/ தேசிய/ மாநில/ புதுச்சேரி யூனியன் பிரதேச அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றதற்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்கவேண்டும்.

மேலும், பின்வரும் நகல் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்:

(i) ஆதார் அட்டை

(ii) வங்கிக் கணக்கு எண் மற்றும் விவரம் அடங்கிய முதல் பக்கம்.

**குறிப்பு:**

- பயிற்சியில் சேரும்போது பயிற்சி பெறுபவர்கள் அவர்களுடைய அசல் சான்றிதழ்களை பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அவை பயிற்சி முடியும் வரை அல்லது பயிற்சியை விட்டு விலகும் வரை திருப்பித் தரப்படமாட்டாது. பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியில் சேரும்போது தேவையான நகல்களை எடுத்து வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- சேர்க்கையின் பொழுது அளிக்கப்படும் அலைபேசி எண் (Mobile Number) மற்றும் மின்னஞ்சல் முகவரி (email ID) ஆகிய இரண்டையும் பயிற்சிக் காலம் முடியும்வரை மாற்றக் கூடாது.



### 14. சான்றிதழ் சரிபார்ப்பு (Verification of Certificates)

மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்படும். தவறான சான்றிதழ்கள் சமர்ப்பித்தால் சம்பந்தப்பட்ட மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படுவதோடு, சம்பந்தப்பட்ட மாணவர் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை (Criminial Proceedings) எடுக்கப்படும்.

### 15. பயிற்சிக் கட்டணம் (Tuition fee)

- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேருபவர்கள் ₹240/- (ரூபாய் இருநூற்று நாற்பது மட்டும்) பயிற்சிக் கட்டணமாக வருடம் ஒருமுறை ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதிக்குள் கட்டவேண்டும்.

- அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேரும் அட்டவணை இனத்தவர் (SC), ஊனமுற்றவர் (PwD) மற்றும் மகளிருக்குப் பயிற்சிக் கட்டணம் இல்லை.
- மேலும், தொழிற்பயிற்சி நிலையத்தில் சேருபவர்கள் அனைவரும் ₹50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) காப்புத் தொகையாகப் பயிற்சியில் சேரும்போது செலுத்தவேண்டும்.
- காப்புத் தொகை திரும்பப் பெறத்தக்கது. பயிற்சி முடித்த ஒரு மாதத்திற்குள் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு பயிற்சியாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### 16. உதவித் தொகை (Stipend)

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்த அனைவருக்கும் வருகை நாட்களுக்கு ஏற்ப மாதந்தோறும் ₹1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

### 17. ஊக்கத் தொகை (Merit scholarship)

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேரும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியாக தரத்தேர்வு (Merit Exam) நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மதிப்பெண் பெறும் பயிற்சியாளருக்கு ₹1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) கூடுதல் ஊக்கத் தொகை (Merit Scholarship) வழங்கப்படும்.

### 18. வேலைவாய்ப்புக் குழு மற்றும் வேலை வாய்ப்புகள் (Placement cell and Job Opportunities)

வேலைவாய்ப்புக் குழுவின் மூலம் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியில் தேர்ச்சி பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தொழிற்சாலைகளிலும், அரசுத்துறை நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்படும்.

மேலும், தொழிற்பழகுநர் பயிற்சி (Apprenticeship Training) பிரிவு மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியில் சேர ஆவன செய்யப்படும்.

### 19. பயிற்சியாளர் நடத்தை மற்றும் ஒழுக்க விதிமுறைகள் (Trainees code of conduct and discipline)

(i) ஒவ்வொரு பயிற்சியாளரும், பயிற்சி நேரங்களில் அடையாள அட்டை அணிவது கட்டாயம்.

(ii) அனைத்து பயிற்சியாளர்களும் சரியான நேரத்தில் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வரவேண்டும். காலதாமதமாக வருபவர்கள் தொழிற்பயிற்சி நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(iii) பயிற்சியாளர்கள் அனைவரும் தவறாமல் தினசரி கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

(iv) ஆண் பயிற்சியாளர்கள் தங்கள் தலைமுடியை சரியான அளவில் வெட்ட வேண்டும், தலைமுடிக்கு வண்ணம் பூசுதல், சாயமிடுதல், காது ஊசிகள் அணிவது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. பெண் பயிற்சியாளர்களுக்கு தளர்வான கூந்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

(v) தொழிற்பயிற்சி நிலையத்தில் கூச்சலிடுவது அல்லது ஓடுவது தவிர்க்கப்பட வேண்டும். நிறுவனத்தில் சீரொழுங்கு பராமரிக்கப்பட வேண்டும்.

(vi) பயிற்சியாளர்கள் விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், ரேடியோக்கள், கேமராக்கள், மொபைல் போன் அல்லது எந்தவொரு மின்னணு சாதனங்கள் மற்றும் நகைகள் போன்ற மதிப்புமிக்க பொருட்களை அணிவதை/ எடுத்து வருவதை தவிர்க்க வேண்டும். இழந்த எந்தவொரு பொருளுக்கும் தொழிற்பயிற்சி நிலையம் பொறுப்பல்ல. பணம் அல்லது மதிப்புமிக்க பொருட்களை கடன் கொடுப்பது அல்லது கடன் வாங்குவது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.

(vii) கருவிகள், உபகரணங்கள் மற்றும் எந்திரங்களைக் கையாளும் போது கவனமாக இருக்கவேண்டும்.

(viii) பயிற்சியாளர்களினால் ஏற்படும் சேதங்கள் உடனடியாக பயிற்றுவிப்பாளர் அல்லது குழு பயிற்றுவிப்பாளர் / தொழிற்பயிற்சி நிலைய முதல்வருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். மேலும், சேதங்களுக்கு அவரவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

(ix) நன்னடத்தை இல்லாத எந்தவொரு பயிற்சியாளரையும் பயிற்சியிலிருந்து நீக்கும் உரிமை தொழிற்பயிற்சி நிலையத்திற்கு உள்ளது.

(x) பயிற்சி நேரங்களில் முறையான காரணம்/ அனுமதி இல்லாமல் எந்தவொரு பயிற்சியாளரும் வகுப்பு/ பணிமனை/ ஆய்வகத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(xi) பயிற்சியாளர்கள் சுத்தமான சீருடையில் மட்டுமே தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வர வேண்டும்.

(xii) பயிற்சிப் பட்டறைகள்/ ஆய்வகங்களில் பயிற்சி நேரங்களில் பயிற்சியாளர்கள் ஆய்வக கோட்/ ஏப்ரான் அணிவது கட்டாயமாகும். இல்லையெனில், பயிற்சியாளர் செய்முறை பயிற்சி செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்.

(xiii) வகுப்பறை/ பட்டறை/ ஆய்வகம் அல்லது வளாகத்திற்குள் எங்கும், எந்தவொரு கூட்டம்/ கொண்டாட்டம் அனுமதிக்கப்பட மாட்டாது.

(xiv) தொழிற்பயிற்சி நிலைய வளாகத்திற்குள் கொடுமைப் படுத்துதல், கிண்டல் செய்தல், கேலிவதை செய்தல் ஆகியவை கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

(xv) அகில இந்திய பயிற்சி தேர்வு/ இறுதி பயிற்சி தேர்வில் கலந்து கொள்ள ஒவ்வொரு பயிற்சியாளரும் குறைந்தது 80% வருகைப் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். 80% வருகைப் பதிவு இல்லாதவர்கள் தேர்வுகளில் பங்குபெற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(xvi) தொழிற்பயிற்சி நிலையத்தின் அனைத்து நிலுவைத் தொகைகளும் தீர்க்கப்படும் வரை மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது. மாற்றுச் சான்றிதழுக்கான எந்தவொரு கோரிக்கையும் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பே செய்யப்பட வேண்டும்.

## 20. NCVT பயிற்சிப் பிரிவுகள், பயிற்சிக் காலம் & கல்வித் தகுதி

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant (NSQF-3) | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 2 | கட்டடப்பட வரைவாளர் – Draughtaman (CIVIL) (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 3 | எலக்ட்ரீஷியன் – Electrician (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 4 | எலக்ட் ரானிக்ஸ் மெக்கானிக் – Electronics Mechanic (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 5 | ஃபிட்டர் – Fitter (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 6 | இயந்திரக் கருவிகள் மெக்கானிக் – Instrument Mechanic (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 7 | கட்டடம் கட்டுபவர் – Mason (Building Constructor) (NSQF-3) | 1-ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 8 | டீசல் மெக்கானிக் – Diesel Mechanic (NSQF-3) | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 9 | மோட்டார் வாகன மெக்கானிக் – Mechanic (Motor Vehicles) (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 10 | டர்னர்– Turner | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 11 | ரெஃப்ரிஜிரேஷன் மற்றும் ஏசி மெக்கானிக் – Refregeration and Air-conditioning Mechanic (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 12 | தையல் பயிற்சி – Sewing Technology (NSQF-3) | 1-ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 13 | நிலமளப்போர் – Surveyor (NSQF-4) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 14 | வெல்டர் – Welder (NSQF-3) | 1-ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 15 | ஒயர்மேன் – Wireman (NSQF-4) | 2-ஆண்டுகள் | 8-ஆம் வகுப்பு |

## 21. SCVT பயிற்சிப் பிரிவுகள், பயிற்சிக் காலம் & கல்வித் தகுதி

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | உணவு மற்றும் விருந்தோம்பல் பயிற்சி – Catering and Hospitality Assistant | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 2 | கம்ப்யூட்டர் இயக்குபவர் – Computer Operator and Programming Assistant | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 3 | அழகுக்கலை பயிற்சி – Cosmetology | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 4 | கம்ப்யூட்டர் பதிவாளர் – Data Entry Operator | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 5 | ட்ரோன் டெக்னிஷியன் – Drone Technician | 6-மாதம் | 10-ஆம் வகுப்பு |
| 6 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 7 | நாகரீக ஆடை தொழில்நுட்பம் – Fashion Design and Technology | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 8 | ஃபிட்டர் - Fitter | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 9 | மெக்கானிக் மின்சார வாகனம் – Mechanic Electric Vehicle | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 10 | மெக்கானிக் (மோட்டார் வாகனம்) – Mechanic (Motor Vehcile) | 2-ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 11 | சோலார் டெக்னிஷியன் – Solar Technician (Electrical) | 1-ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 12 | ஒயர்மேன் – Wireman | 2-ஆண்டுகள் | 8-ஆம் வகுப்பு |

## 22. தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பயிற்சிப் பிரிவுகள்

புதுச்சேரியில் உள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் மகளிர் விண்ணப்பிக்கலாம்.

**அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்**

I. **அரசு ஆண்கள் தொழிற்பயிற்சி நிலையம், மேட்டுப்பாளையம், புதுச்சேரி**

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் / Trades | பயிற்சி காலம் / Duration | கல்வி தகுதி /Educational Qualification | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | கணினி இயக்குபவர் - Computer Operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 2 | கட்டட பட வரைவாளர் - Draughtsman (Civil) | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 3 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 4 | எலக்ட்ரானிக்ஸ் – Electronics Mechanic | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 5 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 3 | 60 |
| 6 | கட்டடம் கட்டுபவர் – Mason (Building Constructor) | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 24 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | மெக்கானிக் (மோட்டார் வாகனம்) – Mechanic (Motor Vehicle) | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 48 |
| 8 | ஏசி டெக்னீஷியன் - R& AC Technician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 9 | வெல்டர் – Welder | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 10 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| SCVT | | | | | |
| 11 | மின்சார வாகன மெக்கானிக் – Mechanic Electric Vehicle | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 12 | ட்ரோன் தொழில்நுட்பம் - Drone Technician | 6 மாதம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 13 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 16 | 356 |

II. அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம், வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | கணினி இயக்குபவர் - Computer operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 2 | தையல் பயிற்சி – Sewing Technology | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 2 | 40 |
| SCVT | | | | | |
| 3 | அழகு கலை பயிற்சி – Cosmetology | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 4 | சோலார் டெக்னீஷியன் – Solar Technician (Electrical) | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| **Total** | | | | **5** | **108** |

III. அரசு தொழிற்பயிற்சி நிலையம், நெட்டப்பாக்கம், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | தையல் பயிற்சி - Sewing Technology | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| SCVT | | | | | |
| 3 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 4 | கணினி இயக்குபவர்- Computer Operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 5 | அழகு கலை பயிற்சி – Cosmetology | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| Total | | | | **5** | **108** |

## IV. அரசு தொழிற்பயிற்சி நிலையம், வில்லியனூர், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NSCT | | | | | |
| 1 | கட்டட பட வரைவாளர் - Draughtsman (Civil) | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| SCVT | | | | | |
| 2 | உணவு மற்றும் விருந்தோம்பல் பயிற்சி - Catering and Hospitality Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 44 |

## V. அரசு தொழிற்பயிற்சி நிலையம், பாகூர், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| SCVT | | | | | |
| 1 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 40 |

## VI. அரசு ஆண்கள் தொழிற்பயிற்சி நிலையம், T.R.பட்டினம், காரைக்கால்

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | கணினி இயக்குபவர்- Computer Operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 2 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 40 |
| 3 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 4 | இயந்திரக்கருவிகள் மெக்கானிக் - Instrument Mechanic | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 5 | டீசல் மெக்கானிக் – Mechanic Diesel | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 48 |
| 6 | மெக்கானிக் (மோட்டார் வாகனம்) - Mechanic (Motor Vehicle) | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 7 | ஏசி டெக்னீஷியன் - R & A/C Technician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 8 | டர்னர் – Turner | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 9 | வெல்டர் – Welder | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 10 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 12 | 264 |

## VII. அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம், T.R.பட்டினம், காரைக்கால்

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கணினி இயக்குபவர் - Computer operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 2 | தையல் பயிற்சி - Sewing Technology | 1 வருடம் | 8-ஆம் வகுப்பு | 2 | 40 |
| SCVT | | | | | |
| 3 | அழகு கலை பயிற்சி - Cosmetology | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 4 | டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் - Data Entry Operator | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| Total | | | | 5 | 112 |

VIII. ராஜீவ் காந்தி அரசு தொழிற்பயிற்சி நிலையம், மாஹே

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | கட்டடப்பட வரைவாளர் – Draughtsman(CIVIL) | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 2 | எலெக் ட் ரிஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 44 |

IX. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஏனாம்

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| NCVT | | | | | |
| 1 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| SCVT | | | | | |
| 2 | கணிணி இயக்குபவர் – Computer Operator and Programming Assistant | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 4 | ஃபேஷன் டிசைன் மற்றும் டெக்னாலஜி - Fashion Design & Technology | 1 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| 5 | மெக்கானிக் (மோட்டார் வாகனம்) – Mechanic Motor Vehcile | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 24 |
| Total | | | | 4 | 92 |

**மொத்த அரசு தொழிற்பயிற்சி நிலைய இடங்கள்: 1168**

## தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

I. இந்திரா காந்தி தனியார் தொழிற்பயிற்சி நிலையம், திருக்கனூர், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 40 |

II. பாண்டி தனியார் தொழிற்பயிற்சி நிலையம், உருளையன்பேட்டை, புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 3 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 3 | 60 |

III. ராஜீவ் மெமோரியல் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், உருளையன்பேட் , புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | பிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 40 |

IV. வொர்த் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், தேங்காய்த்திட்டு, புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | டர்னர் – Turner | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 1 | 20 |

V. திருமலையான் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், அம்பகரத்தூர், காரைக்கால்

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 40 |
| 2 | ஃபிட்டர் – Fitter | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 40 |
| 3 | நிலமளப்போர் – Surveyor | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 2 | 48 |
| 4 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 2 | 40 |
| Total | | | | 8 | 168 |

I. ஸ்ரீ விவேகானந்தா தனியார் தொழிற்பயிற்சி நிலையம், புதுச்சேரி

| வ. எண் | பயிற்சி பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வி தகுதி | பிரிவு / Units | சேர்க்கைகான இடங்களின் எண்ணிக்கை / No. of Seats |
|---|---|---|---|---|---|
| 1 | எலக்ட்ரீஷியன் – Electrician | 2 வருடம் | 10-ஆம் வகுப்பு | 1 | 20 |
| 2 | ஒயர்மேன் – Wireman | 2 வருடம் | 8-ஆம் வகுப்பு | 1 | 20 |
| Total | | | | 2 | 40 |

தனியார் ஐ.டி.ஐ. மொத்த இடங்கள்: 368

### 23. அலுவலக முகவரி & அலைபேசி விவரம் (Contact details)

சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் நேரிலோ அல்லது அலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்:

| | |
|---|---|
| அலுவலக முகவரி | உதவி இயக்குநர் (பயிற்சி),<br>பயிற்சிப் பிரிவு இயக்குநரகம்,<br>தொழிலாளர் துறை வளாகம்,<br>வழுதாவூர் சாலை, காந்தி நகர்,<br>புதுச்சேரி – 605 009. |
| தொலைபேசி எண் | 0413-2273275 |
| அலைபேசி எண் | 80567 86775 |
| மின்னஞ்சல் | adtpdy@gmail.com |
| ஆன்லைன் விண்ணப்பம் சமர்ப்பிக்க இணையதள முகவரி | https://www.centacpuducherry.in/itiadmission/<br>அல்லது<br>https://labour.py.gov.in |